**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | | |
|---|---|---|---|---|
| Calender : | | Miscellaneous | : | |
| Preliminary Register : | | Case No. | : | **S.C.27/2020** |
| Sessions : | | | | |
| | | Prosecution | : | **P.W.3** |
| Deposition of witness for : | | Defence | : | **D.W.** |
| | | Court | : | **C.W.** |

| **Name :** | சகுந்தலா | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **27.01.2026**

**1வது எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் ஏற்பு. 2, 4எதிரிகள் ஆஜர் படுத்தப்பட்டார்கள். 3வது எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் ஆலம்பாடி ரோட்டில் High School பின்புறம் குடியிருக்கிறேன். பழைய போலிஸ்டேசன் முன்பு நான் கண்ணாடி, சீப்பு, விதைகள் விற்பனை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன வீரமணிகண்டன் என்மகனாவர். இந்த வழக்கு எதிரிகளை தெரியும். அவர்கள் என்மகனுடன் அண்ணன், தம்பிகளாக பிரெண்டாக இருந்தார்கள். வழக்கு சம்பவத்திற்கு 2நாட்கள் முன்பு செல்போன் ஆனாகவில்லை, உன்னை தீர்த்துவிடுவேன் என்று சொன்னார்கள். (சாட்சி அழுகிறார்) அதன்பின்னர் என்மகனை கொன்றுவிட்டார்கள். என்மகன் இறந்த தேதி தெரியாது. அங்காயிகோவில் பின்புறம் உள்ள ஆஸ்டலில் சீட்டு விளையாடபோனது தெரியும். தகவல்தெரிந்து என்மருகளான அ.சா.1உடன் ஓடினேன். நேரம் சரியாக தெரியவில்லை. ராத்திரி நேரமாகும். பழகிய பையன்களான ஆனந்த், பார்த்தா, சித்திக் ஆகியோர்கள் சம்பவத்தில் ஈடுபட்டதாக

சொன்னார்கள். அந்த சித்திக் ஏற்கனவே போய்விட்டான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1, 2, 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் நீதிமன்றத்தில் சொன்ன விவரத்தை தான் போலிசார் விசாரணையின் போது சொன்னேன். சம்பவத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு செல் பிரச்சனை சம்மந்தமாக எதிரிகள் மிரட்டியது குறித்து நான் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நானும், அசா.1ம் அப்போது ஒன்றாக தான் குடியிருந்தோம். நான்கூறுவது போன்று எதிரிகள் வீட்டிற்கு வந்து மிரட்டவில்லை என்றால் சரியல்ல. செல்போன் யாரிடம் உள்ளது என்று போலிசார் விசாரணையின் போது சொன்னேனா என்றால் செல்போன் ஆனாகவில்லை என்று அவர்களுக்குள்ளையே பேசிகொண்டார்கள் யாரிடம் உள்ளது என்று எனக்கு தெரியாது. முதுமையின் காரணமாக என்னால் எதிரிகளை அடையாளம் காட்டமுடியாது என்றும், போலிசார் சொல்லிகொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு எதிரிகளுக்கும் சம்பவத்துக்கும் எந்த தொடர்பும் இல்லையென்றும் மருமகள் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>4வது எதிரி தரப்புகுறுக்கு விசாரணை</u>**

நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. அங்கிருந்தவர்கள் சொன்னார்கள்.

**<u>மறுவிசாரணை</u>**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.